**திஸ்ஸமஹாராம பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஜுன் 24 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 20 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 168 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2020 மார்ச் 31 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும் 2020 ஜுன் 24 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | விடய உத்தியோகத்தர் புதிய உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் மற்றும் 2020 பெப்வரி 29 ஆந் திகதியில் கூற்றுக்கள் சமர்ப்பிக்க நேரிட்டதால் இவ்வாறு நேர்ந்தது. எதிர்காலத்தில் இவ்வாறு நேரிடாமல் பொறுப்பாக இருப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு நாட்குறிப்பு 09 இன் மூலம் பொதுப் பேரேட்டின் கணக்குகளின் பிரகாரம் சீராக்கல்கள் நிதிக் கூற்றுக்களில் கூட்டுத் தொகை ரூபா 3,329,408 இற்கான மீதி ஒன்று குறைவாக மற்றும் ரூபா 16,760 இற்கான மீதி ஒன்று மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | பேரேட்டுக் கணக்குகளின் கூட்டுத்தொகை சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | அடுத்த வருடத்திற்கான கணக்குகள் தயாரிக்கும் போது குறைபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் போது நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 225,054 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்களுக் கான வட்டி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கின் வட்டி ரூபா 873,328 தொகை எனவும், அந்த மீதிக்கு சேமிப்புக் கணக்கின் வட்டித் தொகையாகிய ரூபா 224,784 தொகையினை கணக்கீடு செய்யப்பட்டி ருந்ததுடன், எதிர்காலத்தல் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப் பட்டிருந்த 02 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 1,947,454 தொகைக்கான செலவினை மூலதனப் படுத்தியிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அடுத்த வருடம் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | முன்னைய ஆண்டு தொடர்பாக நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மிகை ஒதுக்கம் ரூபா 630,972 தொகைக்காக சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கடன்கொடுத்தோர் மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அடுத்த வருடம் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 12 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 247,894,748 தொகைக்கான மீதிகள், அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 314,942,883 தொகைக்கான சமமின்மைகள் காணப்பட்டது. | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்கான துணைப் பதிவேடுகள் சரியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிக் கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகள் இடையே வித்தியாசமாகக் காணப்பட்ட மீதிகளை இனங்கண்டு அடுத்த கணக்கு தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டு முதல் மாற்றங்களுடன் முன்கொண்டு வரப்பட்டுள்ள ரூபா 192,872 இற்கான தொங்கல் கணக்கு வரவு மீதியை தீர்த்திருக்கவில்லை. மேலும் தொங்கல் கணக்கு பேரேட்டில் சரியான கூட்டுப்பெறுமதி ரூபா 162,072 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 192,871 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 30,800 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தொங்கல் கணக்குகளை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 303,668 இற்கான மீதியில் ரூபா 110,795 இற்கான பெறுமதி மீளாய்வாண்டின் போது சரி செய்ததுடன், மீதி ரூபா 192,877 தொகையை இனங்கண்ட பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 73,817,463 தொகைக்கான 30 கணக்கு விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விரிவாக அட்டவணைகள் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பேன் எனவும், உரிமையை உறுதிப் படுத்தல் தொடர்பாக உரிய பிரிவுகளை அறிவுறுத்தி வருவதுடன், சொத்துக்கள் கணிப்பீடு மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், கணக்குகளில் மேற்கொள் ளப்பட்ட சீராக்கல்கள் அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் எனவும் அறிவிக்கின்றேன். |

**1.5 இணக்கமின்மை**

**1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| i. நி.பி. 33 | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பான அட்டவணை ஒன்று தயாரித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர் களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப் பட்டதுடன், அது தொடர்பான விரிவான அறிக்கை ஒன்று பதிலுடன் சமர்ப்பிக்கின்றேன். |
| ii. நி.பி. 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அடுத்த வருடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச் குடியசரின் நிதிப் பிரமாணங்கள்

-------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| i. | நி.பி. 134(3) | மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய் விற்கு சமர்ப்பித்திருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 03 காலாண்டுகளுக்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பதிலுடன் சமர்ப்பிக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க பொறுப்பாக இருப்பேன். |
| ii. | நி.பி. 371(5) | முற்பணங்கள் உரிய கருமம் முடிவடைந்ததுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கியிருந்த ரூபா 168,639 தொகை பெறுமதியான முற்பணங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தீர்க்கப்படாத முற்பண மீதிகளில் ரூபா 36,000 இற்கான முற்பணம் ஒன்று ரூபா 5,000 வீதம் மாதாந்தம் குறிப்பிட்ட உத்தியோகத்தரினால் செலுத்தப்படுவதுடன், முற்பணங்கள் பெற்றுக் கொண்ட உத்தியோகத் தர்களுக்கு முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்கும் படி கடிதம் அனுப்பப் பட்டதுடன், ரூபா 82,771 இற்கான தீர்க்கப்படாத முற்பணத் தின் நிலுவை மீதி தொடர்பாக ஆவணங்களை பரிசோதனை செய்து விரிவான அட்டவணை ஒன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| iii. | நி.பி. 396 | ரூபா 15,820 பெறுமதிக் கான காலங் கடந்த 08 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ரூபா 12,170 இற்கான காசோலையினை கால நீடிப்பு செய்யும் படி கடிதம் அனுப்பப்பட்டு ள்ளதுடன் ரூபா 3,650 இற்கான காசோலை களை இரத்துச் செய்து வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| iv. | நி.பி. 571 | இரண்டு வருடங்கை மிகைத்துள்ள ரூபா 298,111 தொகை பெறுமதியான வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ரூபா 17,818 இற்கான 10 சதவீத வைப்புத் தொகை சபை நிதியத்திற்கு எடுத்து அறிவிப்பதெனவும், ஒரு வைப்பினை விடுவிப் பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பாதுகாப்பு வைப்புக்கள் தொடர்பான பாதை களின் குறைபாடுகளை சரிசெய்து தரும் படி விவசாய சங்கங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு ள்ளதுடன் குறைபாடு களை சரிசெய்யாவிடின் சபை நிதியத்திற்கு பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| v. | நி.பி. 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்ப மிடப்படும் உடன்படிக்கை களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்ப மிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| vi. | நி.பி. 1645(ஆ), (இ) மற்றும் 1646 | சபையின் 17 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | விடய உத்தியோகத் தரினால் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத் தினால் சிக்கல் நிலை ஏற்பட்டிருந்ததுடன், அவ் வருடங்களுக்கான ஓட்ட அட்டவணைகள் பின்னர் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டன என அறிவிக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2020 ஜனவரி 30 திகதிய PFD/ RED/COPA/ 2019/01 இலக்கங் கொண்ட கடிதத் தின் 04 ஆம் பந்தி | படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குறிப்பிட்ட கடிதத்தின் படி செயற்பட வேண்டும். | செயலாற்றல் அறிக்கை தயாரிப்பதற்கான அறிவின்மை காரணமாக இருந்ததுடன் இது தொடர்பான பயிற்சி ஒன்று அல்லது அறிவுரை வழங்கும் படி விண்ணப்பித்ததுடன், அது தொடர்பான அறிவு மற்றும் பயிற்சி பெற்ற பின்னர் அந்த அறிக்கை தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ஈ) | உள்ளுராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/ 2010/01 இலங்கங் கொண்ட சுற்றறிக் கையின் பந்தி 05 | சபைக்கு சொந்தமான 230 கடையறைகளின் உடன்படிக்கைகள் நாளது வரை ஆக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான 468 கடைகளில் 280 இற்கு அண்மித்த எண்ணிக்கையான வற்றின் உடன்படிக்கை கள் நாளதுவரை ஆக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஆண்டு இறுதி அளவில் மொத்த கடையறைகளின் எண்ணிக்கையில் 90 சதவீதத்திற்கான உடன்படிக்கைகள் நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,710,039 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,977,078 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் திரண்ட நிதிய மீதி ரூபா 11,578,806 இற்கான மறை பெறுமதி ஒன்றினை பெற்றிருந்தது. | திரண்ட நிதியத் தின் மீதி மறை பெறுமதி ஒன்றாக இருக்கக் கூடாது. | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி முன்னைய ஆண்டின் மீதியை விட குறைந்த பெறுமதி ஒன்றினை கொண்டிருந்த துடன், முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் மேற்கொள்ள நேரிட்டமையால் மறை பெறுமதி ஒன்று ஏற்பட்ட தென அறிவிக்கின்றேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,922,970 | 3,321,651 | 2,988,195 | 3,702,655 | 2,872,000 | 3,021,970 | 2,815,626 | 3,223,896 |
| வாடகை | 15,553,310 | 14,787,340 | 15,673,894 | 3,360,498 | 10,351,300 | 14,715,167 | 12,665,597 | 3,372,682 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 13,570,500 | 10,676,563 | 11,174,593 | 784,341 | 13,150,000 | 16,708,495 | 15,520,979 | 1,291,016 |
| ஏனைய வரு மானங்கள் | 25,824,600 | 29,500,912 | 28,202,174 | 31,301,055 | 30,163,900 | 26,802,429 | 23,456,152 | 22,153,406 |
| | 57,871,380 | 58,286,466 | 58,038,856 | 39,146,549 | 56,537,200 | 61,248,062 | 54,458,354 | 30,041,000 |

### 2.3.2 வீதிவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வீதவரி ரூபா 3,056,795 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட அறவிடப்பட வேண்டும். | பெற வேண்டிய வீதவரி மீதியில் ரூபா 204,022 தொகை அறவிடப்பட்ட துடன் மீதியான வீதவரியை அறவீடு செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134 இன் படி சபையின் அதிகாரப் பிரதேசத்தின் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை உரிய காலத்தில் இனங்கண்டு வீதவரி அறவிடக் கூடியதாக இருந்ததுடன் அவ்வாறு செயற்படாமல் 1976 ஆண்டில் இனங்காணப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களுக்காக மாத்திரம் மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவிடப்பட்டிருந்தமையால் புதிய முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்காணாத காலவீச்சு 44 வருடங்களாகும். | சட்டத்தின் படி செயற்பட வேண்டும். | முன்னேற்றப்பட்ட 06 பிரதேசங்கள் இனங்காணப் பட்டதுடன், அந்த அதிகாரப் பிரதேசத்தின் வரைபுகள் தயாரிப்பதற்கு பிரதேச செயலகத்திற்கு மற்றும் மாவட்ட நிலஅளவை அலுவலகத்திற்கு கடிதங்கள் மூலம் விண்ணப்பித்துள்ள துடன் மற்றும் பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அப் பிரதேசங்களின் பொது மக்கள் சுகாதாரம் மற்றும் பொது வசதிகள் அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன். |
| (இ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் சட்டத்தின் பிரிவு 20 இன் படி வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2007 ஆம் ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் மீது மீளாய்வாண்டிலும் வரி அறவிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் படி செயற்பட வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுத் தரும் படி 2012 ஆண்டு முதல் விண்ணப்பித்த போதிலும் இது வரை பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கியிருக்க வில்லை என அறிவிக்கின்றேன். |

### 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய கடையறை வாடகை ரூபா 3,277,340 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் கடை வாடகை நிலுவையாக காணப்பட்ட காலவீச்சு 02 மாதங்களுக்கும் 40 மாதங்களுக்கும் இடைப்பட்டதாகும். | நிலுவை வாடகை வருமானம் அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வுப் பந்தியை ஏற்றுக்கொள்கின்றேன் எனவும், மீளாய்வாண்டு ஒட்டுமொத்த கடை வாடகை அறவீடு ரூபா 7,244,836 தொகை என அறிவிக்கின்றேன். |

#### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி முறையே ரூபா 185,326 தொகை மற்றும் ரூபா 349,920 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி முறையே ரூபா 131,576 தொகை மற்றும் ரூபா 77,040 தொகை அறவிடப்பட்டுள்ளதெனவும் மற்றும் மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக வருமானப் பரிசோதகர்களுக்கு பொறுப்புக்கள் சாட்டப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ள தென அறிவிக்கின்றேன். |

#### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 4,613,123 தொகை மற்றும் ரூபா 25,145,775 தொகை காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அதிகாரிகள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரை ரூபா 7,700,000 தொகையான முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டுள்ள துடன் மீதியான முத்திரைக் கட்டணங்களை மற்றும் நிலுவை நீதிமன்றத் தண்டப் பணத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 29 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகளை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 29 துணை விதிகள் ஆக்கப் பட்டுள்ளதென அறிவிக்கின்றேன். |

**(ஆ) கைவிடப்பட்ட செய்பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திஸ்ஸமஹாராம இளைஞர் விவகாரத்துக்கான பொது நிலையம் நிர்மாணிக்கும் வேலைக்காக ரூபா 563,997 தொகை செலவிடப்பட்ட போதிலும் எதிர்பார்த்த விளைவினை பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான அபிவிருத்தி அலுவல்கள் ஆண்டின் போது செயற்படுத்த வேண்டும். | சபையில் காணப்பட்ட நிதி நெருக்கடி காரணத்தினால் குறிப்பிட்ட கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் மீண்டும் ஆரம்பிக்க முடியாமல் போனதுடன் நிதி ஏற்பாடுகள் கிடைத்தவுடன் ஆரம்பிக்கப்பட்டு பொது மக்கள் உரிமைக்காக கையளிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

**(இ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் அடங்கியுள்ள கூட்டுப்பெறுமதி ரூபா 3,100,000 தொகைக்கான 03 அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி அலுவல் களுக்காக ஒதுக்கப்படும் பணம் அபிவிருத்தி அலுவல்களுக்கு ஈடுபடுத்துவதற்கு தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும். | பாதீட்டின் மூலம் செயற்திட்டத் திற்கான பணம் ஒதுக்கிய போதிலும் சபையின் வசம் நிதி ஏற்பாடுகள் காணப்படின் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப் படுவதுடன், மீளாய்வாண்டில் நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலைமை மீது சபைக்குக் கிடைத்த வருமானம் குறைந்த மட்டத்தில் இருந்ததால் குறிப்பிட்ட செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வில்லை என அறிவிக்கின்றேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவிடு வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்தம் இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகள் தொடர்பாக அறிவினைப் பெற்று எதிர்காலத்தில் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை இனங்காணல் மற்றும் தவிர்த்தலுக்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் அறிக்கையை மேற்பார்வைக்கு ஆளாக்கியிருக்க வில்லை. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை இனங்காண்பதற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுடன் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் பரிசோதனை செய்யப்படுவதுடன், சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்மாணிப்பதற்காக அறிவுரை வழங்கப்படுவதுடன், அவ்வாறின்றேல் நிர்மாண வேலை இடைநிறுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது எனவும், அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை இனங்காணல் மற்றும் தவிர்த்தலுக்காக கணிப்பீடு மேற்கொண்டு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கும் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளேன் என அறிவிக்கின்றேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

#### 3.3.1 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 24 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 44 மிகைப் பதவியணி முறைப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகைப் பதவிகளை முறைப்படுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டாம் நிலைப் பதவிகளில் வெற்றிடங் களை நிரப்பித் தரும்படி விண்ணப்பித்துள்ள போதிலும் அக் கோரிக்கை நிறைவேற்றப் பட்டிருக்காததுடன் தொழிற் பயிற்சி பயிலுனர் பெண் உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டி ருந்ததுடன் 25/2014 சுற்றறிக்கையின் படி 21 பதவிகளை நிரந்தரப் படுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதென அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மற்றும் மனிதவளத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | மனித வள திட்டம் தயாரிப் பதற்காக அறிவு ஒன்று காணப்படாமையால் அது தயாரிக்கப்படாததுடன், ஒட்டு மொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கையொப்பமிடுவதற்காக விடய உத்தியோகத்தருக்கு பொறுப்பு சாட்டப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் வர்த்தக நிலையங்களை இனங்காண்பதற்கு கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வர்த்தக நிலையங்கள் மீதான கணிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த 09 வாகனங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட வாகனத்தை திருத்துவதற்காக பண ஏற்பாடுகள் காணப்படாத துடன் ஏற்பாடுகள் ஒழுங்கு செய்து திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது தேவையான பரிந்துரைகளை பெற்று எதிர்காலத்தில் அப்புறப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 3.5.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அனுபவித்து வரும் 165 காணிகள் மற்றும் 09 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 காணிகள் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தினால் எழுத்துமூலம் ஒப்படைக்கப் பட்டிருந்ததுடன், ஏனைய 162 காணிகளின் உரிமையை முறையாக உரித்தாக்குவதற்கு தென் மாகாண முதலமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சபை நீண்டகாலமாக அனுபவித்து வரும் 02 காணிகள் மற்றும் 06 வாகனங்களை உரித்தாக்கு வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், 03 வாகனங்களை உரித்தாக்கு வதற்கு தேவையான தகவல்கள் காணப்படவில்லை என அறிவிக்கின்றேன். |

### 3.5.3 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 3,467,500 தொகை பெறுமதியான 06 காணிகள் மற்றும் கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் கணிப்பீடு ஒன்று தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதன் பரிந்துரையின் படி சபைக்குச் சொந்தமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படும் காணிகள் மற்றும் கட்டிடங்களை ஆக்கபூர்வ மாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான என்ஜின் களுடனான 02 வள்ளங்கள், 11 தையல் இயந்திரங்கள், ஒரு மின்பிறப்பாக்கி, சீமெந்துக் கல் தயாரிக்கும் இயந்திரம் ஒன்று கல் க்ரசர் இயந்திரம் ஒன்று மற்றும் 50 கிலோ கிராம் இயலளவுள்ள 02 போல்வில் இயந்திரங்கள் நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்படுவதுடன் அவற்றை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்து வதற்கு அல்லது அப்புறப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். | சீமெந்துக் கல் தயாரிக்கும் இயந்திரத்தை டெண்டர் மூலம் விற்பனை செய்து சபைக்கு வருமானம் ஒன்றைப் பெறுவதற்கும் 02 போல்வில் இயந்திரங்களை குறைந்த வருமானம் உடைய சுயதொழில் செய்யும் 02 குடும்பங்களுக்கு உடன்படிக்கையின் கீழ் வழங்குவதற்கும் என்ஜின் உடனான 02 வள்ளங் களை கடற்தொழிற் சங்கங் களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கும் 11 தையல் இயந்திரங்கள் சுயதொழில் செய்வோருக்கு பிரதேச செயலாளரின் பரிந்துரையின் படி வழங்கு வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 ஆண்டின் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக முறையான பெறுகை திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டிற்காக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயற் படுத்தப்பட்டிருக்காததுடன் 2020 ஆண்டிற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரத்தை பெற்று சமர்ப்பிக்கின்றேன். |